# இயல் 3 - கோபல்லபுரத்து மக்கள்

## முன்னுரை

கிராமத்து வெள்ளந்தி மனிதர்கள் காட்டும் விருந்தோம்பல். இயல்பான வரவேற்பும் எளிமையான உணவும் பசித்த வேளையில் வந்தவர்களுக்குத் தம்மிடம் இருப்பதைப் பகிர்ந்து கொடுக்கிற மனித நேயம் ஆகியவற்றை இக்கதைப் பகுதி எடுத்துரைக்கிறது

## விருந்தினன் வருகை

அதிகாலை நேரத்தில் பாச்சல் அருகு எடுத்து முடித்துவிட்டுக் காலைக் கஞ்சியைக் குடிக்க உட்காரும் வேளையில் அன்னமய்யா யாரோ ஒரு சன்னியாசியைக் கூட்டிக்கொண்டு வருவதைக் கண்டான் சுப்பையா. வரட்டும் வரட்டும்; ஒரு வயிற்றுக்கு கஞ்சி ஊற்றி நாமும் குடிப்போம் என்றார் கொத்தாளி. அந்தப் புஞ்சை சாலையோரத்தில் இருந்ததால் தேசாந்திரிகள் வந்து இவர்களிடம் தண்ணீரோ, கஞ்சியோ சாப்பிட்டு விட்டுப் போவது வழக்கம்.

## பசி வாட்டம்

நடக்க முடியாமல் உட்கார்ந்து உட்கார்ந்து எழுந்து ஆயாசமாக மெதுவாக நடந்து வந்து தாடியும் அழுக்கு ஆடையும் தள்ளாட்டமுமாக நடந்து வந்து கொண்டிருந்தவனைப் பார்க்கும்போது வயோதிகனாகவும் சாமியாரைப் போலவும் எண்ண வைத்தது. தற்செயலாக இவனைக் கண்ட அன்னமய்யா அவன் அருகில் சென்று பார்த்த பிறகுதான் தெரிந்தது அவன் ஒரு வாலிபன் என்பது. கால்களை நீட்டி புளிய மரத்தில் சாய்ந்து உட்கார்ந்திருந்த அவனை நெருங்கிப் பார்த்தபோது பசியால் அவன் முகம் வாடிப்போய் இருந்தது தெரிந்தது.

## அன்னமய்யாவின் செயல்

பசியால் வாடிப் போயிருந்த அவன் முகத்தில் தீட்சண்யம் தெரிந்தது. தன்னைப் பார்த்து ஒரு நேசப் புன்னகை காட்டிய அந்த வாலிப மனிதனைப் பார்த்துக்கொண்டே நின்றான் அன்னமய்யா.

குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கிடைக்குமா? என்ற அவனை, தன்னோடு மெதுவாக நடக்க வைத்து அழைத்துச் சென்றான் அன்னமய்யா.

**அன்னமய்யாவின் விருந்தோம்பல்**

வேப்பமரத்தின் அடியில் ஏகப்பட்ட மண் கலயங்கள் இருந்தன. அதில் அன்னமய்யா ஒரு கலயத்தின் மேல் வைக்கப்பட்ட கல்லை அகற்றிச் சிரட்டையில் நீத்துப் பாகத்தை வடித்து அவனிடம் நீட்டினான். அவன் கையில் வாங்கியதும் சப்பிக் குடிப்பதா அண்ணாந்து குடிப்பதா என்கிற தயக்கம் வந்தபோது சும்மா கடிச்சிக் குடிங்க என்றான். இரண்டாவது சிரட்டைக்குக் கலயத்தை ஆட்டி சோற்றின் மகுளி மேலே வந்ததும் அதை வார்த்துக் கொடுத்தான். அந்த வாலிபன் குடித்த பின் சிரட்டையைக் கொடுத்து விட்டு அப்படியே அந்த வேப்ப மரத்து நிழலே சொர்க்கமாய்ப் படுத்ததும் அவனைத் தென்றல்காற்று சுகமாக வந்து அயரச் செய்தது. பிறகு அன்னமய்யா அந்தப் புது ஆளை சுப்பையாவின் வயலுக்கு அழைத்துச் சென்று கம்மஞ்சோற்றைச் சாப்பிட வைத்தான். அந்த வாலிபன் அன்னமய்யா என்ற பெயரை மனதுக்குள் திருப்பித் திருப்பிச் சொல்லிப் பார்த்துக்கொண்டான். எவ்வளவு பொருத்தம் என்று நினைத்துக்கொண்டான்.

**முடிவுரை**

வந்தவனுக்கு எப்படி ஒரு நிறைவு ஏற்பட்டது அதைவிட மேலான ஒரு நிறைவு அன்னமய்யாவுக்கு ஏற்பட்டது. வயிறு நிறைந்ததும் தூங்கிவிடும் குழந்தையைப் பார்ப்பது போல அவனை ஒரு பிரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான் அன்னமய்யா.

> “வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
>
> மிச்சில் மிசைவான் புலம்”.

என்ற குறட்பாவிற்கேற்ப கரிசல் பகுதி மக்களின் விருந்தோம்பல் பண்பினை இக்கதை அழகாக உணர்த்துகிறது.